ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2189/37 - 2020 අගෝස්තු මස 20 වැනි බ්‍රහස්පතින්දා - 2020.08.20
*2189/37 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: ATU/LND/04/DO45.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/2/2016/HA90.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதனை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

மாத்தறை மாவட்டத்தின் அத்துரலிய பிரதேச செயலகப் பிரிவின் ஹவுப்பே கிராமத்தில் அமைந்துள்ள, மாத்தறை நில அளவை அதிகாரியின் அ. க. பி. 73 மேலதிக இல. 4 இறுதிக் கிராம நில அளவைப் படத்தில் காட்டப்படும் கீழே குறிப்பிடப்படும் காணியின் விபரம் :

**1. துண்டு இல. 42**
காணியின் பெயர் : கல்கெட்டியகொட யக்தெலியஓவிட்ட ஹினகமகெயத் தெலியகெவத்த; விபரம் : வீட்டுத்தோட்டம், கலந்த பயிர்ச்செய்கை மற்றும் நிரந்தரக் கட்டிடம் ஒன்று உண்டு; உரிமை கோருவோர் : விகாராதிபதி, ஸ்ரீ போதிருக்காராமை, ஹவுப்பே; விஸ்தீரணம் : 0.0264 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2020 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 21 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு, அத்துரலிய பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகைகளையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும், 2020 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 14 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். உரிமைகளை உறுதிப்படுத்த அனைத்து எழுத்துமூல ஆவணங்களையும் பரீட்சையின் போது முன்வைத்தல் வேண்டும்.

நிரோசா எஸ். கமகே,
பிரதேச செயலாளர்,
அத்துரலிய.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
அத்துரலிய,
2020, ஓகத்து 17.

9 - 104